## தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தை நாள்தோறும் அதிரவைக்கும் கழக எம்.பி.க்கள்!



# நிரம்பி வழியும் ரயில்கள்! ரயில்வே எடுத்த நடவடிக்கை என்ன?

## மக்களவையில்–கனிமொழி கருணாநிதி அடுக்கடுக்கான கேள்விக் கணை!

**புதுடெல்லி, மார்ச் 15– திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் ரயில்களில் பயணிகளின் கூட்டம் பற்றிய முக்கியமான கேள்விகளை எழுத்துபூர்வமாக நாடாளுமன்றத்தில் எழுப்பினார்.**

"நம் நாட்டில் ரயில்களில் பயணிக்கும் கூட்டம் அதிகரித்துக் கொண்டே இருப்பது குறித்து அரசுக்குத் தெரியுமா? அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் பிரச்சினையைத் தீர்க்க அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

முக்கிய ரயில்களில் முன்பதிவில்லாத பொது மற்றும் படுக்கை பெட்டிகளின் எண்ணிக்கையை அரசு குறைத்துள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

கடந்த பத்து ஆண்டுகளில் நாடு முழுவதும் எக்ஸ்பிரஸ் ரயில்களில் பொது, படுக்கை பெட்டிகள் மற்றும் ஏசி பெட்டிகளின் எண்ணிக்கை அதிகரித்தது/ குறைந்தது பற்றிய விவரங்கள் என்ன?

2024-25 ஆம் ஆண்டில் இதுவரை ரயில் பெட்டி தொழிற்சாலைகள் மொத்தமாக தயாரித்த, மற்றும் 2025-26 ஆம் ஆண்டில் தயாரிக்க திட்டமிட்டுள்ள பொது/ படுக்கை/குளிர்சாதன பெட்டிகளின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் என்ன?"

இவ்வாறு அவர் கேள்விகள் எழுப்பினார்.

இந்தக் கேள்விகளுக்கு ரயில்வே, தகவல் மற்றும் ஒளிபரப்பு மற்றும் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் எழுத்துபூர்வமாக அளித்த பதில் வருமாறு:



"இந்திய ரயில்வேயின் கீழ் இயக்கப்படும் ரயில்களில் கூட்டம் ஆண்டு முழுவதும் ஒரே மாதிரியாக இருக்காது. 'பீக் பீரியடு' எனப்படும் அதிக கூட்டமுள்ள காலங்கள், கூட்டம் குறைவான காலங்கள் என வேறுபட்டே இருக்கிறது.

அதிக நெரிசல் உள்ள காலங்களில், குறிப்பாக பிரபலமான வழித்தடங்களில் ரயில்களில் கூட்டம் நிரம்பியே இருக்கும். அதே சமயம் சற்று மக்கள் போக்குவரத்து குறைந்த வழித்தடங்களில் கூட்டம் குறைவாகவே இருக்கிறது.

இந்திய ரயில்வேயில் இயங்கும் ரயில்களின் போக்குவரத்து முறை வழக்கமான கால இடைவெளியில் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது. அதன்படி கூடுதல் தேவையைப் பூர்த்தி செய்ய, ஏற்கனவே உள்ள ரயில்களில் பெட்டிகள் அதிகரிக்கப்படுகின்றன. சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன, புதிய ரயில்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. குறிப்பிட்ட காலத்தில் ரயில்களின் விகிதம் அதிகரிக்கப்படுகிறது.

மேலும் ரயில் பயணிகளுக்கு கூடுதல் வசதிகளை வழங்குவதற்கான தொடர்ச்சியான முயற்சியில், இந்திய ரயில்வே ஈடுபட்டுள்ளது. பயணிகளின் கூடுதல் தேவைகளைப் பூர்த்தி செய்ய பண்டிகைகள், விடுமுறை நாட்கள் போன்றவற்றின் போது சிறப்பு ரயில் சேவைகளையும் இயக்குகிறது.

அதன்படி, 2024 ஆம் ஆண்டில், ஹோலி மற்றும் கோடை விடுமுறையின் போது பயணிகளின் கூடுதல் நெரிசலைப் பூர்த்தி செய்ய சிறப்பு ரயில்கள் 13 ஆயிரத்து 523 முறை இயக்கப்பட்டன

துர்கா பூஜை, தீபாவளி பண்டிகைகளின் போது ஏற்பட்ட கூட்டத்தை சமாளிக்க, சிறப்பு ரயில்கள் மூலம் 7990 பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. அக்டோபர் 1, 2024 முதல் நவம்பர் 30, 2024 வரை சுமார் 1.8 கோடி பயணிகளுக்கு இந்த கூடுதல் ரயில் சேவைகள் பயன்பட்டுள்ளன.

சமீபத்தில் முடிவடைந்த மகா கும்பமேளாவின் போது பயணிகளுக்கு வசதியாக, ஜனவரி 13, 2025 முதல் 28 பிப்ரவரி, 2025 வரை 17 ஆயிரத்து 300க்கும் மேற்பட்ட ரயில்களை இந்திய ரயில்வே இயக்கியுள்ளது, இதன் மூலம் தோராயமாக 4.24 கோடி மக்கள் பயன்பெற்றனர்.

மேற்கூறியவற்றைத் தவிர, பல்வேறு பிரிவு பயணிகள் பயன்பெறும் வகையில் பல கூடுதல் ரயில்கள் இயக்கப்பட்டுள்ளன. பயணிகளுக்கான கூடுதல் வசதிகளும் நிரந்தர, தற்காலிக அடிப்படையில் அமைக்கப்பட்டன.

2023-24 ஆம் ஆண்டில், ரயில் சேவைகளை அதிகரிக்க நிரந்தர அடிப்படையில் 872 பெட்டிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன, அதே நேரத்தில் 2024-25 ஆம் ஆண்டில் (பிப்ரவரி, 2025 வரை) 983 பெட்டிகள் நிரந்தர விரிவாக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், பொது மற்றும் ஏசி அல்லாத ஸ்லீப்பர் பெட்டிகளைப் பயன்படுத்தும் பயணிகளுக்கு அதிக இடவசதியை வழங்கும் வகையில்... மெயில்/எக்ஸ்பிரஸ் ரயில்களில், 22 பெட்டிகள் கொண்ட ரயிலில் 12 பொது மற்றும் ஸ்லீப்பர் பெட்டிகள் மற்றும் 8 ஏசி பெட்டிகள் என்பதுதான் இப்போது பின்பற்றப்படுகிறது.

இதன் மூலம் பொது மற்றும் ஏசி அல்லாத ஸ்லீப்பர் பெட்டிகளைப் பயன்படுத்தும் பயணிகளுக்கு அதிக இடவசதி வழங்கப்படுகிறது. மேலும், தற்போது ரயில்களின் மொத்த பெட்டிகளில், மூன்றில் இரண்டு பங்கு ஏசி அல்லாதவை, மூன்றில் ஒரு பங்கு ஏசி பெட்டிகளாக இருக்கின்றன.

கூடுதலாக, இந்திய ரயில்வே அமிர்த பாரத் சேவைகள் மூலம் பல்வேறு புதிய சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளது, அவை அதிநவீன தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ளன. அதிர்வு இல்லாத பயணம், வசதியான ஜன்னல்கள், மடிக்கக்கூடிய சிற்றுண்டி மேசை மற்றும் பாட்டில், மொபைல் வைக்கும் வசதி போன்ற மேம்பட்ட அம்சங்கள் இந்த நவீன ரயில்களில் இடம் பெற்றுள்ளன. 12 ஸ்லீப்பர் வகுப்பு பெட்டிகள் மற்றும் 8 பொது வகுப்பு பெட்டிகளைக் கொண்டுள்ள ஏசி அல்லாத இந்த ரயில்கள், பயணிகளுக்கு உயர்தர சேவைகளை வழங்குகின்றன.

பயணிகளின் வசதிகளை அதிகரிக்கும் நோக்கில், LHB பெட்டிகளுடன் இயக்கப்படும் மெயில்/ எக்ஸ்பிரஸ் ரயில்களில், முன்பதிவு செய்யப்படாத சுமார் 1200 பொது வகுப்பு பெட்டிகள் நடப்பு நிதியாண்டில் இணைக்கப்பட்டுள்ளன.

அதிகரித்து வரும் தேவையைக் கருத்தில் கொண்டு, இந்திய ரயில்வே 17,000 க்கும் மேற்பட்ட பொது வகுப்பு/ ஸ்லீப்பர் வகுப்பு (ஏசி அல்லாத) பெட்டிகளை தயாரிக்க திட்டமிட்டுள்ளது. 2024-25 நிதியாண்டில் (பிப்ரவரி 2025 வரை), ரயில் பெட்டி தொழிற்சாலைகள் 6485 பெட்டிகளை தயாரித்துள்ளன" என்று ரயில்வே அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ்நாட்டில்

# வேலை வாய்ப்புகளை உருவாக்க எடுத்த நடவடிக்கை என்ன?

## மக்களவையில் சி.என். அண்ணாதுரை கேள்வி!

**புதுடெல்லி, மார்ச் 15– தமிழ்நாட்டில் வேலை வாய்ப்புகளை உருவாக்க ஒன்றிய அரசு மேற்கொண்டு நடவடிக்கைகள் குறித்து விளக்க வேண்டும் என சி.என்.அண்ணாதுரை மக்களவையில் கேள்வி எழுப்பி உள்ளார்.**

மக்களவையில் நடந்த கேள்வி நேரத்தின் போது, திருவண்ணாமலை தாகுதி திமுக எம்பி சி.என்.அண்ணாதுரை தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாட்டில் கடந்த 5 ஆண்டுகளில் பல்வேறு அரசுத்திட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்புகளின் விவரங்கள் குறித்து ஒன்றிய அரசு தெரிவிக்க வேண்டும்.

அதன் மூலம், வேலைவாய்ப்பு பெற்ற இளைஞர்களின் எண்ணிக்கை, குறிப்பாக தமிழ்நாட்டில் ஒவ்வொருமாநிலத்திலும் வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கு பங்களித்த



முக்கிய தொழில்கள், கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில் வேலை வாய்ப்பை ஊக்குவிப்பதற்காக ஒன்றிய அரசு முயற்சிகளை மேற்கொண்டுள் ளதாளனவிளக்க வேண்டும்.

மேலும், கடந்த 5 ஆண்டுகளில் அரசு மற்றும் தனியார் துறைகளால் உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்பு கள் விவரங்களை மாநில வாரியாக அரசு வெளி யிட வேண்டும். அரசு மற்றும் தனியார் துறைகளில் வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கு பங்களிக்கும் முக்கிய துறைகள் மற்றும்தனியார் துறையில் வேலை வாய்ப்பை மேலும் அதிகரிக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்து அரசு தெரிவிக்க வேண்டும்.

அதேபோல், தமிழ்நாட்டில் தற்போ துள்ள தொழிற் பயிற்சி நிறுவனங்களின் (ஐடிஐ)உள் கட்டமைப்பை மேம்படுத்த அரசு இதுவரை என்னென்ன முயற்சி கள் மேற்கொண்டுள்ளது.

குறிப்பாக. நடப்பு நிதியாண்டில்ஐடி ஐகளை நவீனமயமாக்கவும், புதுப்பிப்பக்கவும் ஒதுக்கப்பட்ட நிதியின் விவரங்களை வெளியிட வேண்டும்.

மேலும், கடந்த மூன்று ஆண்டுகளில் ஐடிஐகளில் பயிற்சி அளிப்பதற்கான உள் கட்டமைப்பை மேம் படுத்துவதற்கு வழங்கப்பட்ட உதவித்தொகை மற்றும் பயிற்றுநர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்பட்ட உதவிகள் குறித்து அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

## குடியாத்தம் நகரில்

# அதிவேக ரெயில்கள் நின்று செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## மக்களவையில்–டி.எம்.கதிர் ஆனந்த் வலியுறுத்தல்!

**புதுடெல்லி, மார்ச் 15– குடியாத்தம் ரயில் நிலையத்தை அதிநவீன தொழில்நுட்ப வசதிகளுடன் மறுவடிவமைப்பு செய்யவும், குடியாத்தம் டவுன் ரயில் நிலையத்தில் முக்கிய ரயில்கள் நின்று செல்வதற்கு ஆவன செய்யுமாறு மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் விதி எண் 377 கீழ் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.**

இது குறித்து அவர் பேசியதாவது:-

குடியாத்தம் டவுன் ரயில் நிலையம் தினசரி ரயில் பயணம் மேற்கொள்ளும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஒரு முக்கியமான ரயில் நிலையங்களில் ஒன்றாகும். ரயில்வே துறை இதன் முழு திறனையும் முழுமையாகப் பயன்படுத்தவில்லை.

குடியாத்தம் ரயில் நிலை



யம் அதிக மக்கள் தொகை கொண்ட நகர்புறம் மற்றும் கிராமங்களுக்கு மிக அருகில் உள்ளது. இந்த ரயில் நிலையத்தில் முன்னோக்கி மற்றும் கீழ்நோக்கி பயணிக்கும் பிளாட்பாரப் பாதைகள் பிரதான பாதையில் மட்டுமே அமைந்துள்ளன. குடியாத்தம் நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் தினசரி ரயில் பயணிகள் 350 மேற்பட்ட கிராமப்புற புறநகர்ப் பகுதிகளில் வாழும் மக்கள் ரயிலில் ஏறுவதற்கு சிரமப்படுகின்றனர். குடியாத்தம் நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களைச் சேர்ந்த ஏராளமான தொழிலாளர்கள் சென்னை, காஞ்சிபுரம், பெங்களூரு மற்றும் கோயம்புத்தூர் பகுதிகளில் பணிபுரிகின்றனர்.

குடியாத்தம் ரயில் நிலையத்தில் வந்து இறங்கும் மக்களுக்கு வசதியாக, குடியாத்தம் ரயில் நிலையத்தை சமீபத்திய அதிநவீன தொழில்நுட்ப வசதிகளுடன் மறுவடிவமைப்பு செய்ய வேண்டிய அவசியம் உள்ளது.

எனது வேலூர் நாடாளுமன்றத் தொகுதி மக்களின் சார்பாக, குடியாத்தம் ரயில் நிலையத்தை அதிநவீன வசதிகளுடன் மறுவடிவமைப்பு செய்வதை விரைவுபடுத்தவும், நான்கு முக்கியமான ரயில்களுக்கு நிறுத்துமிடங்களை உருவாக்கவும் ரயில்வே அமைச்சரை நான் கேட்டுக்கொள்கிறேன்.

1. லால்பாக் எக்ஸ்பிரஸ் (ரயில் எண். 12607/12608)

2. திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் (ரயில் எண். 12695/ 12696)

3. கோவை எக்ஸ்பிரஸ் (ரயில் எண். 12675/12676)

4. பிருந்தாவன் எக்ஸ்பிரஸ் (ரயில் எண் 12639/ 12640)

குடியாத்தம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான ரயில் பயணிகளுக்குப் ரயிலில் பயனளிக்கும் வகையில் குடியாத்தம் டவுன் ரயில் நிலையத்தில் மேற்கூறிய ரயில்கள் நின்று செல்வதற்கு ஆவன செய்யுமாறு ஒன்றிய அரசிடம் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு டி.எம்.கதிர் ஆனந்த் வலியுறுத்தினார்.

## இளம் வயதினர் திடீர் மரணமடைய

# கொரோனா தடுப்பூசி காரணம் அல்ல!

## டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்விக்கு – ஒன்றிய அரசு விளக்கம்!

**புதுடெல்லி, மார்ச் 15– 35 முதல் 55 வயதுடையவர்கள் குறிப்பாக இளைஞர்கள் திடீர் மாரடைப்பு மற்றும் இதயம் சார்ந்த நோய்களால் பாதிக்கப்பட்டு உயிரிழக்கிறார்கள். இதற்கு கொரோனா காலத்தில் எடுத்துக்கொண்ட மருந்துகள் காரணமா? இது பற்றி ஒன்றிய அரசு ஆய்வு மேற்கொண்டதா? என்று மாநிலங்களவையில் கழக உறுப்பினர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பி இருந்தார்.**

இதற்கு ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை இணையமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ் அளித்த பதில்:

இந்தியாவில் 19 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 18 வயது முதல் 45 வயது வரை உள்ள இளைஞர்களின் காரணம் தெரியாத திடீர் மரணங்கள் பற்றி இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகமும் தேசிய தொற்று நோயியல் நிறுவனமும் இணைந்து 2023 மே மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை ஓர் ஆய்வை மேற்கொண்டன.

2012 அக்டோபர் மாதம் முதல் 2023 மார்ச் மாதம் வரையிலான காலகட்டத்தில் வேறு எந்த நோய் பின்னணியும் இல்லாமல், மரணத்திற்கு 24 மணி நேரம் முன்பு வரை ஆரோக்கியமாக இருந்து திடீர் மரணமடைந்தவர்கள் பற்றி



இந்த ஆய்வு நடந்தது. வயது, பாலினம், அருகில் இருந்த பிற நோயாளிகள், கொரோனா தடுப்பூசி போட்டு கொண்ட விபரங்கள், அவரது குடும்பத்தினர் முன்பு இப்படி திடீர் மரணத்திற்கு ஆளாகியிருக்கிறார்களா? புகை பிடிக்கும் பழக்கம் இருந்ததா? குடிப்பழக்கம் உள்ளவர்களா? மரணத்திற்கு இரண்டு நாள் முன்பிலிருந்து கடுமையான உடற்பயிற்சி மேற்கொண்டார்களா? என்பது போன்ற கேள்விகள் இந்த ஆய்வில் பயன்படுத்தப்பட்டது தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

அந்த குறிப்பிட்ட காலகட்டத்தில் மரணமடைந்த 729 பேர் மற்றும் ஒவ்வொருவருக்கும் அவர்களது வயது மற்றும் பாலினத்தை ஒட்டிய நான்கு பேர் என மேலும் 2916 பேர் ஆகியோரின் மருத்துவ மற்றும் அன்றாட பழக்க வழக்கங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

ஏதேனும் ஒரு கொரோனா தடுப்பூசி ஒருமுறை எடுத்துக் கொண்டவர்களுக்கு திடீர் மரணத்திற்கான வாய்ப்பு இல்லை என்பதும்;. இரண்டு தடுப்பூசி எடுத்துக்கொண்டவர்களுக்கு திடீர் மரணத்திற்கான வாய்ப்பு மேலும் குறைவு என்பதும் இந்த ஆய்வின் மூலம் முதலில் உறுதிப்படுத்தப்பட்டது.

கொரோனாவுக்கு முந்தைய மருத்துவ சிகிச்சைகள், அளவுக்கு அதிகமான குடிப்பழக்கம், 48 மணி நேரத்திற்கு முன்பாக கடுமையாக உடற்பயிற்சி செய்தது, அந்தக் குடும்பத்தில் ஏற்கனவே சிலர் இப்படி திடீர் மரணம் அடைந்தது ஆகிய பின்னணிகளே இந்த திடீர் மரணங்களுக்குக் காரணம் என்பதும் இந்த ஆய்வில் தெரிய வந்தது. ஆக, கொரோனா தடுப்பூசிக்கும் இந்த திடீர் மரணங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது இந்த ஆய்வின் மூலம் தெளிவாகியுள்ளது.

கொரோனா தடுப்பூசி போட்டுக்கொண்ட பிறகு ஏற்படும் எதிர்மறை விளைவுகள் பற்று ஆய்வு செய்ய நோயியல், நரம்பியல், மகப்பேறு, குழந்தைகள் நலன் ஆகிய துறைவல்லுனர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டு தொடர் ஆய்வுகளும் நடந்து வருகிறது.

திடீர் மரணங்களைத் தடுக்கும் வகையில், தொற்று நோய் அல்லாத நோய்களை முன்னரே கண்டறிந்து சிகிச்சை அளிக்கவும், மேல் சிகிச்சைக்கான ஆலோசனைகள் வழங்கவும் நாடு முழுக்க 770 மாவட்டங்களில் பிரத்யேக மருத்துவமனைகளும், 372 பகல் நேர சிகிச்சை மையங்களும், 233 இதய நோய் சிகிச்சை மையங்களும், 6410 சமுதாய சிகிச்சை மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

மக்கள் தொகைக்கு ஏற்ப தேவையான இடங்களில் பெரும் நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் மையங்களை அமைக்கவும் தேசிய சுகாதாரத் திட்டத்தின் கீழ் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இதுதவிர, இதய நோய் போன்ற விஷயங்களில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பிரச்சாரம் செய்யப்படுகிறது. வாழ்க்கை முறையை ஆரோக்கியமான வகையில் மாற்றி அமைத்துக்கொள்ள பொதுமக்களுக்கு அறிவுரை வழங்கப்படுகிறது. இந்த விஷயங்களில் மாநிலங்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை ஒன்றிய அரசு வழங்கி வருகிறது.

ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதி செய்யும் வகையில் சத்துள்ள உணவுகளை உட்கொள்ளவும், விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி, யோகா பயிற்சியில் மக்களை பங்கெடுக்கச் செய்யவும் ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் பல்வேறு திட்டங்கள் செயல்பாட்டில் இருக்கின்றன.

இவ்வாறு அமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ் பதிலளித்தார்.

## தமிழ்நாட்டில் மீனவர்களின் தனிநபர் வருமானத்தை அதிகரிக்க

# ஒன்றிய அரசு ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறதா?

## மக்களவையில்–தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!

**புதுடெல்லி, மார்ச் 15– நாடாளுமன்ற மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன், மீனவர்களின் தனிநபர் வருமானத்தை பெருக்க ஒன்றிய அரசு ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறதா? என்பது உள்ளிட்ட சில கேள்விகளை எழுப்பினார். அதற்கு ஒன்றிய மீன்வளத்துறை இணை அமைச்சர் ஜார்ஜ் குரியன் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் கூறப்பட்டு இருப்பதாவது:–**

ஒன்றிய அரசின் மீன்வளத் துறை, தமிழ்நாடு அரசுடன் இணைந்து, தமிழ்நாட்டில் ஒட்டுமொத்த மீன் உற்பத்தியை அதிகரிக்கவும், அதன் மூலம் மீனவர்கள், மீன் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. உள்நாட்டு மீன் வளர்ப்பாளர்களுக்கு புதிய நன்னீர் மீன் குஞ்சு பொரிக்கும் நிலையங்கள், மீன் வளர்ப்பு குளங்கள், நன்னீர் உயிரி குளங்கள், மறுசுழற்சி மீன் வளர்ப்பு அமைப்பு மற்றும் மீன் தீவன ஆலைகள் கட்டுவதற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது.

வேகமாக வளரும் மரபணு ரீதியாக மேம்படுத்தப்பட்ட திலாப்பியாவுக்காகவும் குஞ்சு பொரிக்கும் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. கூண்டு வளர்ப்பு மற்றும் மாற்று வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக, ஒருங்கிணைந்த நீர்த்தேக்க மேம்பாட்டுத் திட்டத்தில் அரசு ரூ. 11.08 கோடியை ஒதுக்கியுள்ளது. கடல் துறையில், தமிழ்நாட்டின் 7 மாவட்டங்களில் சுமார் 2,000 மீனவ குடும்பங்கள் கடற்பாசி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளன. இது மீனவப் பெண்களுக்கு மாற்று வருமான ஆதாரமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. குளிர்பதன வசதிகளில், அறுவடைக்குப் பிந்தைய இழப்பைக் குறைப்பதற்கும் மீனவர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கும், தனிமைப்படுத்தப்பட்ட வாகனங்கள், குளிர்பதன வாகனங்கள், ஐஸ் பெட்டிகள் கொண்ட இரு சக்கர, மூன்று சக்கர வாகனங்கள், நவீன மீன் சில்லறை சந்தைகள் வழங்கப்பட்டு உள்ளன.

மீன்வளத் துறைக்கான உட்கட்டமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, இந்திய அரசின் மீன்வளத் துறை, 'மீன்வளர்ப்பு மற்றும் மீன்வளர்ப்பு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி' என்ற பிரத்யேக நிதியை உருவாக்கியுள்ளது. இதன் மொத்த நிதி அளவு ரூ.7,522.48 கோடி ஆகும். இதில் மீன்வள உள் கட்டமைப்பு திட்டங்களுக்கு ஆண்டுக்கு 3 சதவீதம் வரை வட்டி மானியம் வழங்கப்படுகிறது. மேற்படி திட்டத்தின் கீழ், தமிழக அரசுக்கு ரூ.1573.73 கோடி திட்டச்செலவில் 64 திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. மேலும், கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்தின் கீழ், ரூ.1664.39 கோடி திட்டச்செலவில் 96 திட்டங்கள் தமிழ்நாட்டிற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.



ஒன்றிய அரசின் மீன்வளத்துறை, தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் மூலம், பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா திட்டத்தின் கீழ், தமிழ்நாடு உள்பட அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் குழு விபத்து காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதில் முழு காப்பீட்டு பிரீமியத் தொகையும் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் செலுத்தப்படுகிறது. பயனாளியின் பங்களிப்பு எதுவும் இல்லை. இந்த திட்டத்தின் கீழ் வழங்கப்படும் காப்பீட்டுத் திட்டத்தில் இறப்பு அல்லது நிரந்தர மொத்த ஊனத்திற்கு ரூ.5,00,000, நிரந்தர பகுதி ஊனத்திற்கு ரூ.2,50,000 மற்றும் (விபத்து ஏற்பட்டால் ரூ.25,000 மற்றும் மருத்துவமனை செலவுகள் அடங்கும்.

கடந்த மூன்று (2021-22 முதல் 2023-24 வரை) மற்றும் நடப்பு நிதியாண்டில் (2024-25) 131.30 லட்சம் மீனவர்களுக்கு இந்த திட்டத்தின் கீழ் காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு சராசரியாக 32.82 லட்சம் மீனவர்கள் காப்பீட்டுத் தொகை பெற்று உள்ளனர். இதன் விளைவாக, இன்று வரை 1710 கோரிக்கைகளில் 1047 கோரிக்கைகள் தீர்க்கப்பட்டுள்ளன. கோரிக்கை தீர்க்கப்பட்ட தொகை ரூ. 52.13 கோடி ஆகும்.

இந்திய அரசின் மீன்வளத் துறை, கடந்த 4 ஆண்டுகள் (2020-21 முதல் 2023-24 வரை) மற்றும் நடப்பு நிதியாண்டில் (2024-25) ரூ. 8926.33 கோடி மத்திய பங்களிப்போடு மொத்தம் ரூ.20990.79 கோடி செலவில் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்த நிதியில், நாட்டில் மீன்வளம் மற்றும் மீனவர்களின் முழுமையான மேம்பாட்டிற்காக ரூ.4670.79 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 3160.86 கோடி பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழச்சி தங்கபாண்டியன் பேசினார்.